படுவதில்லை. அதைப் பொறியாளர்கள் ஆய்வு செய்து, எத்தனை ஆண்டுக் காலமாக எவ்வளவு நீர் ஓடுகிறது, எவ்வளவு மழை பொழியும், எவ்வளவு நீர் நிற்கும், அது நின்றால் எத்தனை ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும்; அப்படிப் பாசனத்தைப் பெற்றால் எவ்வளவு உணவு உற்பத்தி கிடைக்கும் என்ற எக்கனாமிக் ரிப்போர்ட்--அதை எல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்து இந்தந்த இடத்தில் இந்த அணைதான் கட்டலாம் என்று அவர்கள் ஒரு ஆய்வு அறிக்கை தருகிறார்கள். நம்முடைய கண்ணுக்கு அதை இன்னும் பெரியதாகக் கட்டலாம் என்று தோன்றலாம். நாம் நேரடியாகப் பார்ப்பதற்கும், கேமிரா விலே பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு என்று சொல்வார்கள், சினிமா பாஷையிலே. அப்படி நம்முடைய கண்ணுக்கு வேறாகவும் பொறியாளர்களுடைய கண்ணுக்கு வேறாகவும் தெரியும். எது எப்படி இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நான் கவனத்திலே கொண்டு இருக்கிறேன். ஆய்வு அறிக்கை வரட்டும்.

குளங்களை நவீனப்படுத்துதல்.

*3323—திரு. ஆச்சியூர் எம். மணி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உலகவங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திருக்குரங்குடி, களக்காடு, நாங்குநேரி, விஜயநாராயணம், வள்ளியூர், மூலைக்கரைப்பட்டி, ஈத்தாமொழி பகுதியிலுள்ள குளங்களை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள பாசனக் கண்மாய் களை நவீனப்படுத்துவதற்காக உலக வங்கியிடம் கடன் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடைசியில் அந்த உலக வங்கியினுடைய குழு தமிழ்நாட்டுக்கு வந்து ஆய்வு செய்தபின் சில கண்மாய்களை மட்டும்தான் முதற்கண் முன்னோடித் திட்ட மாக சீர்படுத்த எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைசெய்தது. அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நாங்குநேரியைச் சேர்ந்த விஜய நாராயணம், வள்ளியூர், திருக்குரங்குடி பகுதிகளைச் சேர்ந்த குளங்கள் எல்லாம் நீண்ட காலமாக பழுது பார்க்கப்படாத காரணத்தால் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன. மழை இல்லாமல் அவை மிகவும் வறண்டு காணப்படுகிற காரணத்தால்

அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவைகளைச் செப்பனிட்டு பழுது பார்த்து, தூர் எடுத்து, கரைகளை எல்லாம் செப்பனிட்டு அங்குள்ள மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையிலே அரசு செயல் பட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டு இருக்கிற ஏரிகளை மட்டுமல்ல, தமிழ் நாட்டில் இருக்கிற எல்லா ஏரிகளையும் நவீனப்படுத்த வேண்டு மென்று ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அது உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது. 310 கோடி ரூபாயிலே அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் உலக வங்கி அந்தத் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டது. பிறகு, இருந்தாலும் பரவாயில்லை என்று, தாமிரபரணி, பாலாறு, வைகை, பெண்ணையாறு ஆகிய ஆறுகளின் நீர்ப் பிடிப்புப் பகுதியிலுள்ள 5,720 ஏரிகளை யாவது நவீனப்படுத்தலாம் என்று கால்வாய்களை லைனிங் செய்வது உட்பட 400 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் தீட்டப் பட்டது. அவற்றையும் உலக வங்கியில் இருப்பவர்கள் சமீபத் தில் வந்து, ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லிவிட்டு, மீதி இருக்கிற தாமிரபரணி, வைகை, பெண்ணையாறு, பாலாறு பகுதிகளில் இருக்கிற ஒருசில ஏரிகளை அதாவது 850 ஏரிகளை மட்டும் எடுத்துக்கொண்டு 164 கோடி ரூபாயிலே நவீனப்படுத்தலாம் என்று அவர்கள் தெரிவித் தார்கள். பின்னர் அக்குழுவானது அந்த ரூ. 164 கோடித் திட்டத்திற்குக்கூட இறுதி ஒப்புதல் தராமல் முன்னோடித் திட்டமாக சில ஏரிகளை மட்டும் நவீனப்படுத்த இவ்வரசு கருத்துரு அனுப்பினால் உலக வங்கி பரிசீலிக்க ஆயத்தமாக இருப் பதாகத் தெரிவித்துள்ளது. இத்தகைய முன்னோடித் திட்டத்தை நம்முடைய பொறியாளர்களும் சரி, மத்திய அரசும் சரி ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தாமிரபரணி, வைகை, பெண்ணையாறு, பாலாறு பகுதிகளில் இருக்கிற 5720 ஏரிகளையும் செப்பனிட உலக வங்கியால் மறுக்கப்பட்டதால் அடுத்து என்ன செய்வது என்றும், ஈ.ஈ.சி. மூலமாக ஏரிகளை சீரமைக்கும் முதலாம் இரண் டாம் கட்டப் பணிகளை மதிப்பீடு செய்தபின் பிற ஏரிகள் சீரமைப்புக்கு உலக வங்கி மற்றும் ஏனைய நாடுகளின் நிதி உதவி பெறும் கோரிக்கையைத் தொடரலாமா என்பது குறித்தும், யோசித்துக் கொண்டு இருக்கிறோம். எது எப்படி இருந்தாலும் ஏரிகளை நவீனப்படுத்துகிற காரியம் தொடர்ந்து நடைபெறும்.

நாராயணக் காவேரி திட்டம்.

* *3844*—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுக்காவில் நாராயணக்காவேரி திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படும் ?